**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. தங்கவேல்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.06.2026**

A1, A2, are present.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 10 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை சுயம்புலிங்கசுவாமி கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியாது, சாட்சிகள் தர்மராஜ், சதிஷ், ராஜன் ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். என்னுடன் வேலை பார்ப்பவர்கள். செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை

விசாரிக்கவில்லை. சம்மன் கொடுத்த பிறகுதான் சாட்சி என்ற விவரமே தெரியும். செல்வகுமார் எப்படி இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதையும் கேள்விப்படவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதிஷ், தர்மராஜ், ராஜன், ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேற்படி அ.சா.1

ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியும் TN92 B 1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், சதிஷ், ராஜன், தர்மராஜ், தங்கவேல் ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி வைத்திருந்த

கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற பெருமாள் வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.
(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.9

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சாந்தகுமார்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.06.2026**

A1, A2, are present.

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை பிள்ளையார்கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. அ.சா.8 தங்கவேலை தெரியும். அவர் உள்ளூர்காரர்தான். நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியாது, சாட்சிகள் தர்மராஜ், சதிஷ், ராஜன் ஆகியோர்களை தெரியாது, செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக

போலீசார் என்னை விசாரிக்கவில்லை. செல்வகுமார் எப்படி இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதையும் கேள்விப்படவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதிஷ், தர்மராஜ், ராஜன், தங்கவேல் ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேற்படி அ.சா.1

ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியும் TN92 B 1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், சதிஷ், ராஜன், தர்மராஜ், தங்கவேல் ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி வைத்திருந்த

கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற பெருமாள் வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.
(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.